**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**<u>முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.</u>**

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22-ம் நாள் திங்கள்கிழமை

**<u>IA.No.02/2024</u>**

**In**

**<u>O.S No.99/2019</u>**

அகஸ்டின் **......மனுதாரர்/உத்தேச 2 ம் பிரதிவாதி**

**//எதிர்//**

பாப்பரசன் **.......எதிர்மனுதாரர்/வாதி**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/உத்தேச 2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.S.ராமநாதன்.,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.வினோத்குமார்.,B.Sc.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது மனுதாரர்/உத்தேச 2 ம் பிரதிவாதி தரப்பில் கட்டளை 1 விதி 10(2)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்:-</u>**

வழக்கு சொத்து தொடர்பாக அசல் வழக்கு வாதி உரிமை விளம்பல் செய்திடக்கோரி வழக்கு மோசஸ் என்பவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தில் எனக்கு சொந்தமாக 10 செண்ட் இடம் சொந்தமானது ஆகும். மனுதாரருக்கு சொந்தமான 10 செண்ட் இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வந்துள்ளார். தற்போது மேற்படி கூரை வீடானது சேதமடைந்து போய்விட்டதால் தற்போது வேறு இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகின்றார். வழக்கு சொத்தில் அவரது அனுபோகம் மற்றும் பயன்பாட்டினை அனுசரித்து

அவரின் பெயருக்கு கூட்டு பட்டா தாக்கல் ஆகியுள்ளது. மேற்படி பட்டா எண் 196 ஆகும். இந்நிலையில் கடந்த 23.09.2023 ம் தேதியில் அவருக்கு சொந்தமான இடத்தினை நீதிமன்ற ஆணையர் அளவை செய்தார் அப்பொழுது அவர் என்வென்று விசாரித்தபோது அப்போதுதான் வழக்கு வாதி சொத்தினை பொருத்து மனுதாரரை சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரத்தினை தெரிந்து கொண்டார். வேண்டுமென்றே வழக்கில் தவறான தகவல்களை தெரிவித்தும் உண்மைக்கு மாறான சங்கதிகளை தெரிவித்தும் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து வருவாய் ஆவணங்களில் கண்டுள்ள மனுதாரரையும் வாதியின் சகோதரர் ராஜேந்திரன் என்பவரையும் சேர்க்காமல் வேண்டுமென்றே வழக்கினை தாக்கல் செய்துள்ளார். வேண்டுமென்றே அவசிய தரப்பினரான அவரை சேர்க்காமல் உரிமை விளம்பல் கோரியுள்ளது தவறானது ஆகும். வழக்கு சொத்தில் மனுதாரருக்கு உரிய உரிமை பொருத்து நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். அவ்வாறு இல்லாது போனால் அவரது சொத்துரிமை முற்றிலுமாக பாதிக்கப்படக்கூடும். வழக்கில் மனுதாரரை தரப்பினாராக சேர்த்தால் மட்டுமே அவரால் உரிய விளக்கங்களை தெரிவிக்க இயலும். வழக்கு சொத்துக்கள் தொடர்பான அனைத்து விவரங்களும் மனுதாரருக்கு முழுமையாக தெரியும். மேற்படி வழக்கில் மனுதாரரை தரப்பினராக சேர்க்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை ஆட்சேபனையின் சுருக்கம் :-</u>**

வழக்கு சொத்து இந்த வாதிக்கு செட்டில்மெண்டு காலம் முதல் பூர்விக பாத்தியப்பட்ட சொத்தாகும். இதில்கண்ட பிரதிவாதி வாதியின் அனுமதியுடன் குடியிருந்து கொண்டு தற்சமயம் காலி செய்யாமல் பிரச்சனை செய்ததால் மேற்படி நபரிடம் இருந்து காலிசுவாதீனம் வேண்டி மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் மனுதாரர் குடியிருந்ததற்கான எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. அவருக்கு எதனடிப்படையில் மேற்படி இடத்திற்கு கூட்டுப்பட்டா ஏற்பட்டது. அவருக்கும் தாவா சொத்திற்கும் எந்த ஒரு உரிமையும் இல்லாமல் UDR ஏற்பட்ட தவறான கூட்டுப்பட்டாவின் அடிப்படையில் இதில்கண்ட மனுதாரருக்கு தாவா சொத்தில் எந்த ஒரு உரிமையும் இருந்துவிடாது. மேற்படி சட்டத்தின் படி (Patta is not a title of document) பட்டா என்பது ஒரு நபரின் உரிமையை காட்டக்கூடிய ஆவணமும் இல்லை என்பதே சட்ட நியதி. இவ்வாறாக பார்க்கும்போது தவறான முறையில் பட்டாவை ரத்து செய்ய வருவாய் கோட்டாட்சியரிடம் மனு செய்து உத்தரவு நிலுவையில் உள்ளது. மேற்படி வருவாய் ஆய்வாளர் தனது கோப்புகளின் மூலம் மேற்படி பட்டா தவறுதலாக உள்ள நபரை

நீக்கும்போது மேற்படி நபர் இவ்வழக்கிற்கு தேவையற்ற நபர் ஆகின்றார். கூட்டுப்பட்டாவில் பெயர் உள்ளது என்ற ஒரே அடிப்படை ஆதாரமற்ற ஆவணத்தை வைத்து மேற்படி வழக்கில் 2 ம் பிரதிவாதியாக மனுதாரரை சேர்த்தால் இந்த வழக்கின் நிலைபாடு உருகுலைந்துவிடும். எனவே மனுதாரரின் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது மனுதாரர்/உத்தேச 2 ம் பிரதிவாதியால் தன்னை தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டுமென்றும், வழக்கு சொத்து அவருக்கு சொந்தமான பத்து செண்ட் இடம் இருப்பதாகவும், 23.09.2023 ம் தேதியன்று நீதிமன்ற ஆணையர் இடத்தினை அளவை செய்து விசாரித்தபோது தான் வாதி தாவா வழக்கினை வாதி தாவா வழக்கினை தாக்கல் செய்த விபரம் தெரிய வந்ததாகவும், தாவா வழக்கிற்கு மனுதாரர் அத்தியாவசியமான தரப்பினர் என்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

வாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில் 10 செண்ட் இடம் இருப்பதாக பொய்யாக கட்சி செய்யப்பட்டிருப்பதாகவும், மனுதாரர் வழக்கு சொத்து குடியிருப்பதற்கான எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், தவறான கூட்டுப்பட்டாவின் அடிப்படையில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் மனுதாரர் தரப்பில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இருப்பினும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை ஆட்சேபனையில் மனுதாரரின் பெயர் கூட்டுப்பட்டாவில் இருப்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்டா எண். 84-க்கான சிட்டாவை தாவா புல எண். 211/8D ல் கூட்டுப்பட்டாவில் மனுதாரர் 3 வது நபராக காட்டப்பட்டுள்ளார். எதனடிப்படையில் மனுதாரரின் பெயர் கூட்டுப்பட்டாவில் சேர்க்கப்பட்டது என்பது முழுமையான விசாரணைக்கு பிறகே தீர்வு காண முடியும். ஆனால் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சிட்டாவின் அடிப்படையிலேயே மனுதாரரின் பெயர் கூட்டுப்பட்டாதாரராக காட்டப்பட்டுள்ளதாலும், தாவா வழக்கானது வாதியால் உரிமைவிளம்பல் பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், தாவா வழக்கெழு வினாவை தீர்மானிப்பதற்கு மனுதாரர் அத்தியாவசியமான தரப்பினர் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி:** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை

**//உண்மை நகல்//**

SIVAGAMASUNDARY V

Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2025.09.22 16:32:58 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**
**I.A.No.02/2024**
**O.S.No. 99/2019**
**நாள். 22.09.2025**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**